கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
வடக்கு - கிழக்கு மாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව
උතුරු - නැගෙනහිර පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT
NORTH-EAST PROVINCE
உட்துறைமுக வீதி, திருகோணமலை. / ඇතුල් වරාය පාර ත්‍රිකුණාමලය / Inner Harbour Road, Trincomalee

எனது இல. / මගේ අංකය / My No. NEP/CO/AUD/GEN/01

உமது இல. / ඔබේ අංකය / Your No.

சுற்றறிக்கை இல: 07/2005

2005.12.14

சகல கூ.அ.உ.ஆணையாளர்களுக்கும்,

## கூட்டுறவுச் சங்கங்களின் நிதி துஷ்பிரயோகம் செய்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் அலுவலர்கள். மற்றும் பணியாளர்கள் பல்வேறுபட்ட காரணங்களுக்காக சங்க நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளும் முற்பணம் துஷ்பிரயோகம் செய்யப்படுவது எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையானது பாரிய குற்றமாகும். அத்துடன் இவ்வகையில் செயல்படும் அலுவலர், பணியாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளிலும் ஈடுபடல் வேண்டும். எனவே இந்நிலையை தவிர்ப்பதற்காக பின்வரும் வகையில் செயல்படும்படி அறிவுறுத்த விரும்புகின்றேன்.

1) அத்தியாவசிய காரணத்தின் நிமித்தம் மட்டுமே முற்பணம் வழங்கப்படல் வேண்டும். பெறப்பட்ட முற்பணம் உரிய விடயத்திற்கு மட்டும் பயன்படுத்தப்பட்டு 07 நாட்களுக்குள் முற்பணம் சீர்செய்யப்படல் வேண்டும்.

2) முன்னர் பெறப்பட்ட முற்பண வருமதி உள்ள அலுவலருக்கும், பணியாளருக்கும் அம்முற்பணம் முற்றாக சீர்செய்யும் வரை மீண்டும் வழங்கப்படலாகாது.

3) தேவைக்கேற்ற வகையில் இயக்குனர் சபையின் அல்லது தலைவரின் தீர்மானத்திற்கமைய முற்பணம் வழங்கப்படலாம். ஆயினும் முற்பணம் வழங்குவதற்குமுன் வேறுமாற்று முறை கடைப்பிடிக்க முடியாதுள்ளது என்பதனை உறுதிசெய்ய முடியுமேயாயின் மட்டுமே செலவுறுதிச் சிட்டையில் கொடுப்பனவு அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

[illegible]அலுவலகம் / කාර්යාලය / Gen.Office : 026-2222189.
ஆணையாளர் / කොමසාරිස් / CCD&RCS (NEP): 026-2221019
சங்கங்கள் பிரிவு / සමිති අංශය / Societies Section : 026-2222749
தொலை நகல் / ෆැක්ස් / Fax : 026-2220856.
உ.ஆணையாளர் / ස.කොමසාරිස් / Asst.Commissioner: 026-2220857
மின்னஞ்சல் / ඊ - මේල් / E-Mail : ccdnep@sltnet.lk

4) நேரடியாக கொடுப்பனவு மேற்கொள்ளக் கூடிய எந்த ஒரு விடயத்திற்கும் முற்பணம் வழங்கப்படலாகாது.

5) பெற்ற காரணத்திற்காக உரிய முற்பணம் பயன்படுத்த முடியாதவிடத்து, வழங்கப்பட்ட முற்பணம் உடன் அறவிடப்படல் வேண்டும்.

6) பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணம் சீர்செய்யப்படாவிடின், அதுபற்றி விடய எழுதுநர் உடனடியாக பொதுமுகாமையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

7) முற்பண பதிவேட்டினை உடனுக்குடன் பூர்த்திசெய்து, மீதியை உடன் பார்வையிடக் கூடியதாக பேணப்படல் வேண்டும்.

8) ஒருவர் பெற்ற முற்பணம் பிறிதொருவருக்கு முற்பணமாக வழங்கப்படலாகாது.

இச்சுற்றுநிருப அறிவுறுத்தல்களை கூ.அ.அலுவலர்கள் கூட்டுறவுச் சங்க தலைவர்கள், உள்ளடங்கிய பணித்தொகுதியினருக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கவும். இவ்வறிவுறுத்தலை மீறி செயல்படும் ஒவ்வொருவரும் குற்றமொன்றினைப் புரிந்தவராக கருதப்படுவார் என்பதையும் தெரியப்படுத்தவும்.

இ.இளங்கோவன்,
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்.

பிரதி: அதிபர், கூ.ப.நிறுவனம், வவுனியா.